Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Jan. 15 : 825 Nos.
  - Up to Dec. 14 : 816 Nos.
- **Performance Jan. 15 ...**
  - Turnover growth : 4.50%
  - Employment growth : -1.67%
  - 100% Attendance : 9.44%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Treatment Equipments.

Fib Tec COMPOSITE – FRP/ GRP Equipments.

HydroGen Go Green – HHO Generators

Titanictrade WE DELIVER VALUE CHAIN – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## பாரதத்திற்கு இவை எல்லாம் வேண்டும்

* பிச்சைக்காரர்கள் இல்லாத பாரதம்.
* பிழைப்புக்கு வெளிநாடு போகாத இளைஞர்கள்.
* பல நாட்டவர்க்கும் வேலைவாய்ப்பு நல்கும் பாரதம்.
* கடன் இல்லாத பாரதம்.
* தீவிரவாதம் இல்லாத பாரதம்.
* இயற்கை விவசாயம் செய்யும் உழவர்கள்.
* சூரிய சக்தியை நன்கு பயன்படுத்தும் மக்கள்.
* எதற்கும் முறையாக வரிசையில் நிற்கும் பழக்கம்.
* இலவசங்களைக் காட்டி ஓட்டு வாங்காத கட்சிகள்.
* இலவசங்களைக் காட்டினாலும் ஏமாறாத மக்கள்.
* மதுக்கடை இல்லாத தெருக்கள்.
* காலாவதி ஆன மருந்துகள் விற்காத கம்பெனிகள்.
* மணல் கொள்ளையடிக்காத அரசியல்வாதிகள்.
* நெரிசல் இல்லாத பேருந்து வசதி.
* இறைசந்நிதானத்தில் எல்லோரையும் சமமாக நடத்துதல்.
* சாலை விதிகள் மதிக்கப்படுதல்.
* செல்போன் கலாச்சாரத்தால் குறைந்த சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கையை மீண்டும் அதிகரிக்க முயற்சி.
* அனைவருக்கும் அடிப்படைச் சட்ட அறிவு.
* ஓட்டைகள் இல்லாத சட்டம்.
* நோயாளிகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்கும் தொல்லை தராத கட்சி ஊர்வலங்கள்.
* கருப்பு பணம் இல்லாத பாரதம்.
* ஒழுக்கமான, சுயநலமற்ற தலைவர்கள்.
* உலகம் வெப்பமாதலைத் தடுக்கும் மக்கள்.

Compiled By : Mr. V. P. Jeyakumar
Managing Director

## இருளுக்கு வெளிச்சம்

பூமிக்கு இரவு வெளிச்சம் என்ற வாழ்க்கையைத் தருவது நிலவு தான்...!
ஆனால், நிலவு வராத நாளில் பூமி
தற்கொலை செய்து கொள்ளவில்லை...!
கனவு தான் மனிதனின் வாழ்க்கை...!
அது கலையும் போது கலங்காதே...!
நிலவும் சூரியனும் மாறி மாறி வரும் பூமிக்கே இருள் வருகிறது...!
உன் வாழ்க்கையில் வருவது மட்டும் புதிதா...?
இருளுக்குள் வாழ்வது இருளல்ல, இருள்விட்டு வெளிவராமல்
கலங்குவதே இருள்...!

Compiled By : Miss. P. Nirmala Devi
Finance

## FUNCTIONAL WISHES




**Holi**
**06th MARCH**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank
Auditing : M/s. Nisar & Kumar
AQ Auditing : M/s. Juran Quality
Legal Advisers : Lr. M.K. Govindan
: Lr. V. Benedict Vincent
Tech. Consultant: Dr.G.S. Viswanath
Central Excise : Mr. R. Raghavan
Health Care : M/s. Bethesda Hospital
Tel: 22294565
: M/s. Jeya Clinic
Tel: 098408 73107

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Mr. E. SEKAR** **03rd Mar.**
Production

**Mr. S.K.MURUGAN** **14th Mar.**
Administration

**Mr. K. RAMESH** **15th Mar.**
Coating

**Mr. S. SIVASUBRAMANIAN** **15th Mar.**
Marketing



**Mrs. M. BHAVANI** **17th Mar.**
Administration

**Mr. C. VIJAYA KUMAR** **18th Mar.**
Fibtec

**Mr. S. MATHI KRISHNAN** **20th Mar.**
Marketing

**Mr. D. JOTHI** **22nd Mar.**
Administration

**Mr. A. SABAPATHY** **24th Mar.**
Fibtec

**Mr. S. AROKYA RAJ** **27th Mar.**
Production

**Best Wishes from Tiaano Employees**

## கான்∴பிடன்ஸ் கார்னர்

ஹென்றி ∴போர்டிடம் தொழில் தொடர்பான கேள்விகளை நிறைய பத்திரிகையாளர்கள் கேட்டதுண்டு. அவரும் விரிவாக பதில் சொல்வார். ஒரு நாள் மாலை, உணவகம் ஒன்றில் ஹென்றி ∴போர்டு அமைதியாக உட்கார்ந்திருப்பதை ஒரு பத்திரிகையாளர் பார்த்தார். அவரை நெருங்கி தனிப்பட்ட முறையில் ஒரு கேள்வி கேட்டார், "அய்யா! உங்கள் மிகச்சிறந்த நண்பர் யார்?"

ஒரு நிமிடம் யோசித்த ஹென்றி ∴போர்டு, பேனாவை எடுத்து, மேசை விரிப்பின் மேல் கொட்டை எழுத்தில் எழுதினார், "உங்களுக்குள் இருக்கும் மிகச்சிறந்த அம்சத்தை யார் வெளிக்கொண்டு வருகிறாரோ அவர்தான் மிகச்சிறந்த நண்பர்".

இப்போது சொல்லுங்கள். உங்களுக்கு மிகச்சிறந்த நண்பர்கள் உண்டா?

–கான்∴பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## மாத்தி யோசிங்க

எனக்கு எப்போதும் தோல்விதான், கொஞ்சம்கூட ராசி இல்லாதவன், வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை" என்று பலரும் புலம்பக் கேட்டிருப்போம்.

ஒரு வியாபாரத்தைத் தொடங்கி, அதில் சின்னஞ்சிறுசறுக்கல் வந்தால் கூட சோர்ந்து போய்விடும் பலரையும் பார்த்திருப்போம். இதில் உண்மை என்னவெனில், எந்த ஒரு செயலையும் வெற்றிகரமாகச் செய்ய நினைத்து அதில் தோல்வி அடைந்தவர்கள் அதே செயலில் சின்னச் சின்னமாற்றங்களை மட்டும் செய்துவிட்டால் வெற்றிக்கனியைச் சுலபமாகச் சுவைக்க முடியும். வாடிக்கையாளர்கள் தேடி வந்து வாங்குவதைவிட, நாமே தேடிப்போய் கொடுக்கலாமே என்ற முயற்சியில் இறங்கி, முதல் முதலாக தவணை முறைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதில் மாபெரும் சாதனையும் படைத்தது ஒரு நிறுவனம்.

வீட்டில் இருக்கிற கட்டில் இடத்தை அடைக்கிறதே என்று ஒருவர் சிந்தித்ததன் விளைவு, அது மடக்கு நாற்காலியாக மாறியது. இதனால் மடக்கு நாற்காலிகளின் விற்பனையும் பலமடங்குகளாகப் பெருகியது.

ஒரு காலத்தில் அஞ்சல் அலுவலகத்தில் உரிமம் பெற்று வீட்டில் ரேடியோ வைத்துக் கொண்டிருந்த காலங்களில் பாடல்களையோ அல்லது செய்திகளையோ வீட்டில் மட்டும் தான் கேட்கமுடிந்தது. மற்ற இடங்களில் கேட்க முடியவில்லையே, அதற்கு என்ன செய்வது என்று மாற்றிச் சிந்தித்ததன் விளைவு, அது பாக்கெட் ரேடியோவாக மாறியது. இந்த பாக்கெட் சைஸ் ரேடியோவில் வருகிற சத்தமும் பலருக்கு இடையூறாக இருக்கிறதே என்று சிந்தித்ததன் விளைவு, அது வாக்மேனாகிப் போனது.

ரேடியோ – பாக்கெட் மற்றும் ரேடியோ – வாக்மேன் இவை மூன்றுமே சிறிது மாற்றிச் சிந்தித்ததன் விளைவால் இவற்றின் விற்பனை அந்தந்தக் காலங்களில் ஒருபெரும் புரட்சியையே ஏற்படுத்தின.

சோப்பு, ஷாம்பு, ஊதுபத்தி உள்ளிட்டவற்றின் உற்பத்தி நிறுவனங்கள் கூட விநோதமான விளம்பரங்களையும், சின்னச் சின்னமாற்றங்களையும் செய்து விற்பனையைப் பலமடங்கு உயர்த்தியிருக்கின்றன. காலண்டர், டெலிபோன் டைரி, நோட்புேடு, கடிகாரம், கேமரா,

## தெரிந்து கொள்வோம்

**தமிழ் மொழியின் சிறப்புகளில் சில :-**

1. சீனப் பெருஞ்சுவரில் நுழை வாயிலில் “பாளையகாரர்கள் நுழை வாயில்” என்று தமிழில் எழுதப்பட்டிருக்கும்.
2. கனடா பாராளுமன்றத்தில் தமிழ் மொழியில் பாராளுமன்றம் என்பது பொறிக்கப்பட்டிருக்கும்.
3. உயரமான நயாகரா நீர் வீழ்ச்சியில் தமிழ் மொழியில் நீர் வீழ்ச்சியின் பெயர் இடம் பெற்று இருக்கும்.
4. ரஷ்ய அதிபர் மாளிகையில் தமிழ் மொழியிலும் மாளிகையின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும்.
5. 1947 ஆங்கிலேயர்கள் மாநாட்டில் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்கலாமா என்ற விவாதத்தின் பொது ஆங்கிலேய தளபதி இந்தியாவின் மிகப் பெரிய சொத்தான திருக்குறளை நாம் எடுத்து வந்தாகி விட்டது...இனிமேல் அது வெறும் மண்தான்... ஆகவே அது நமக்கு தேவையில்லை என்று கூறினாரம்.
6. உலகில் பைபிளுக்கு அடுத்தப் படியாக அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள்.

## நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் சீரகம்

உலகின் மிகப் பழமையான மணமூட்டிகளில், அதிக செல்வாக்கு நிறைந்தவைகளுள் சீரகம் ரொம்ப முக்கியமானது.

பார்க்கும் போது அவ்வளவு அழகாய் இல்லாமல் கொஞ்சம் அழுக்காய், அப்படியே சாப்பிட்டால் லேசான கசப்பாய், உலர்வாய் இருக்கும் இந்த சீரகம்.

எட்டுத் திப்பில் ஈரைந்து சீரகம் கட்டுத் தேனில் கலந்துண்ண விக்கலும் விட்டுப்போகும்” என விடாதிருக்கும் விக்கலுக்கு, திகில் பயமெல்லாம் காட்டவேண்டாம்!

எட்டு திப்பிலியும் பத்து சீரகமும் பொடித்து தேனில் கலந்து கொடுத்தால் போதும் என்கிறது சித்த மருத்துவம்.

Collected from Internet

மியூசிக் பிளேயர், கால்குலேட்டர், நினைவுபடுத்தும் அலாரம், குறுந்தகவல்களைக் குறித்தநேரத்தில் அனுப்பும் வசதி, பொழுதைப் போக்கிட விளையாடும் வசதி, இணையதளங்களைப் பார்க்கும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் சின்னஞ்சிறு கையடக்கக் கருவியான செல்போனில் இருப்பதால்தான் இன்று அதன் விற்பனை ஒவ்வொராண்டும் பலகோடிகளைத் தொடுகிறது. சாதாரண பாமரன் முதல் பணம் படைத்தவர்கள் வரை அனைவருக்குமே செல்போன் ஓர் அங்கமாகவே மாறிப்போய் விட்டது.

கடுமையான வறுமையிலும் தான் அணியும் கறுப்புக்கோட்டின் கிழிசல்களை வெள்ளை நூலால் தைப்பாராம் மகாகவி பாரதி. கறுப்பில் வெள்ளை நூல் பளிச்சென்று அசிங்கமாகத் தெரிகிறதே என்று அந்த நூல் மீது கறுப்பு மையை தடவிக்கொண்டு வெளியில் வருவாராம். அதனால் தானோ என்னவோ அவர் அணிந்திருந்த உடையாலும், எழுதிய பாடல்களாலும் மனிதர்களின் மனங்களை உழுதாரா எனத் தெரியவில்லை. வெள்ளைத் தலைப்பாகையும், முறுக்கியஅரும்புமீசையும், கருநிறக் கோட்டும் பாட்டுப் பாரதியை அடையாளம் காட்டின. சட்டை இல்லாத உடலும், அணிந்திருந்த கண்ணாடியும், கையில் இருந்த கைத்தடியும் மகாத்மாவின் மந்திரசக்திகளாகவே இருந்தன. துறவி உடையும், அதே நிறத் தலைப்பாகையும் சுவாமி விவேகானந்தரின் விவேகத்தையும், வீரத்தையும் வெளிப்படுத்தின. இப்படியாக தோற்றத்தில் கூட கொஞ்சம் மாற்றிச் சிந்தித்து அதன்படி செயல்பட்டவர்கள் வாழ்வில் ஓர் உயர்ந்த இடத்தைத் தொட்டிருக்கிறார்கள். எனவே சின்னச் சின்ன விஷயங்கள் கூட மிகப்பெரிய மாற்றங்களைத் தந்திருக்கின்றன. எனவே தோற்றம், பேச்சு, செயல் இவை மூன்றிலும் ஏதேனும் ஒன்றிலோ அல்லது மூன்றிலுமோ கொஞ்சமாவது மாற்றிச் சிந்தித்து, தேவைக்குத் தக்கவாறு, வித்தியாசங்களையும் குழைத்து, செய்யப் பழகிவிட்டால் வெற்றி உங்களைத் தேடி வந்து உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும்.

Compiled By : Mr. K. Manivannan
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி XXXVIII)

**அஞ்சறைப் பெட்டி**

கிடைக்கிறது. காரணம், உப்பு டப்பா அடிக்கடிப் பயன்படுத்துகிற பொருள். ஆகவே, அவசரத்துக்குச் சட்டென்று தென்படும்படி, முதல் அலமாரியின் விளிம்பிலேயே அதைப் பத்திரப்படுத்தி இருக்கிறோம்.

ஒரு வேளை, நாம் தேடியது உப்பு டப்பா இல்லை; அஜின மோட்டாத் தூள் என்று வைத்துக் கொள்வோம். அதுவும் இப்படிச் சுலபமாகச் சிக்கிவிடுமா?

ம்ஹீம். வாய்ப்புகள் குறைவு. ஏனெனில் எப்போதாவது பயன்படுத்துகிற அஜினமோட்டா, நான்காவது அலமாரியின் ஒரு மூலையில் ஒளிந்து கொண்டிருக்கிறது. அங்கே சென்று, தேடிப்பிடித்துத் தான் எடுத்துவர வேண்டும்.

சரி, அடுத்து எனக்கு மிளகு வேண்டும், சீரகம் வேண்டும், கொஞ்சம் கடுகும் வேண்டும். இந்த மூன்று பொருள்களுக்காக, மூன்று முறை சமையலறையின் வெவ்வேறு மூலைகளுக்குச் சென்று திரும்ப வேண்டியிருக்குமா? இல்லை.

## கவிதைகள்

### உன்னை

உன்னை நேசிப்பவர்களை எண்ணி
சந்தோசப்படு
உன்னை வெறுப்பவர்களை எண்ணி
துக்கப்படாதே
உன்னை ஆதரிப்பவர்களை எண்ணி
உற்சாகப்படு
உன்னை எதிர்ப்பவர்களை எண்ணி
சோர்வடையாதே
உன்னை உயர்வாக எண்ணுகிறவர்களுக்கு
நன்றியோடிரு
உன்னை அற்பமாக எண்ணுகிறவர்கள்மேல்
வெறுப்படையாதே
உனக்கு உதவினவர்களை ஒருபோதும்
மறவாதே
உனக்கு உதவாதவர்களை எண்ணி
கசக்காதே
உன்னை பாராட்டுகின்றவர்களை எண்ணி
திருப்தியாயிரு
உன்னை விமர்சிக்கின்றவர்களை எண்ணி
அதிருப்தியடையாதே

Compiled by Miss. T. Regi
Facilitation

### மரம்

மரங்களை வெட்டி விட்டு...
அதில் செய்த விசிறியை
வைத்து வீசிக் கொண்டு...
சொல்கிறான்...
காற்றே வர வில்லை என்று!!

Compiled by Mrs. K. Shreemadhi
Administration

## சிந்தனைக்கு

யாருடைய நம்பிக்கையையும் குலைக்க முயலாதே. முடிந்தால் மேலான ஒன்றைக் கொடு. முடிந்தால் அவன் நிற்கும் நிலையிலிருந்து மேலே தூக்க முயற்சி செய். ஆனால் அவனிடம் உள்ளதை அழிக்காதே.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

அஞ்சறைப் பெட்டிப் பாத்திரத்துக்குள், இவை எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு வைத்திருக்கிறோம். அந்த ஒற்றைப் பாத்திரத்தைத் தேடி எடுத்தாலே போதும், வேண்டிய மசாலாக்கள் எல்லாம் கிடைத்துவிடும்.

அதாவது, ஒரே மாதிரியான பயன்பாட்டைக் கொண்ட மசாலாப் பொருள்களை ஒரே இடத்தில் சேமித்து வைத்தால், அது எந்த இடம் என்பதும் நமக்கு தெளிவாகத் தெரிந்திருந்தால், தேவைப்படுகிற போது அவற்றை சட்டென்று எடுத்து பயன்படுத்த முடியும்.

இதே அஞ்சறைப் பெட்டி உத்தியைத் தொழிற்சாலை உதாரணத்துக்கும் கொண்டு செல்லலாம். அடிக்கடி உபயோகப்படுத்துகிற ஸ்பேனர், ஸ்க்ரூ உள்ளிட்ட கருவிகளையெல்லாம் ஒரே இடத்தில் வைத்தால், தொழிலாளர்கள் அவற்றைத் தேடி அநாவசியமாக அலையவேண்டியதில்லை, இல்லையா?

காற்றோட்டமில்லாத ஒற்றை அறையினுள் இயங்கும் வொர்க்ஷாப்களில் தொடங்கி, பெரிய உற்பத்திச் சாலைகள் வரை, எல்லா இடங்களிலும் இப்படி ஓர் ஏற்பாட்டை நாம் நிச்சயமாகப் பார்க்கமுடியும். தொழிலாளர்களின் நேரத்தைப் பெருமளவு மிச்சப்படுத்தும் இந்தப் பலகைக்கு, 'பெக் போர்ட்' அல்லது 'பெக் ரேக்' (Peg Board / Peg Rack) என்று பெயர்.

பெரும்பாலும் சுவரில் மாட்டப்பட்டிருக்கிற இந்தப் பலகையில், பல்வேறு கருவிகள் அல்லது உபகரணங்களின் உருவம் செதுக்கப்பட்டிருக்கும். அந்தந்த இடங்களில், அந்தந்தக் கருவிகளைப் பொருத்திவிட முடியும். அதாவது, ஒரு குறிப்பிட்ட ஸ்பேனரை, 'பெக்' பலகையிலிருந்து எடுத்து பயன்படுத்துகிறவர்கள், மீண்டும் அதே இடத்தில் வைத்தாக வேண்டும். தவறுதலாக வேறு இடங்களில் வைக்க முயன்றால், பொருந்தாது.

இதனால், நமக்கு மூன்று லாபங்கள்ஹ

ஒன்று, அடிக்கடிப் பயன்படுத்துகிற கருவிகளைத் தேடி யாரும், எங்கும் அலைய வேண்டியதில்லை. எல்லாம் ஒரே இடத்தில் பளிச்சென்று வசதியாக கண்ணில் படுகிறது.

தொடரும்...

## TITANIUM VESSEL 2

